செ.வெ.எண்: 10/ மே நாள்: 04.05.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## ஓய்வூதியதாரர்களுக்கு வருகின்ற 10.05.2016 மற்றும் 11.05.2016 ஆகிய இரண்டு நாட்களில் இராமநாதபுரம் மாவட்ட கருவூலம் மற்றும் சம்பந்தப்பட்ட சார்நிலைக் கருவூலங்களில் புகைப்படம் எடுக்கும் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது

### மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டக் கருவூலம் மற்றும் சார்நிலைக் கருவூலங்களில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்கள் சம்பந்தப்பட்ட கருவூலங்களில் 2016-ஆம் ஆண்டிற்கான வருடாந்திர நேர்காணல் ஏப்ரல்- 1ஆம் தேதி முதல் நடைபெற்று வருகிறது. நேர்காணலில் ஓய்வூதியதாரர்களின் ஆதார் அடையாள அட்டை நகல், குடும்ப அட்டை எண் மற்றும் வருமான வரி கணக்கு எண் (PAN) ஆகியவைகளின் நகல் பெறப்பட்டு மின் ஓய்வூதிய மென்பொருளில் (e-pension) தினந்தோறும் பதியப்பட்டு வருகிறது.

ஓய்வூதியதாரர்களின் நலன் கருதி இதுவரையிலும் ஆதார் அடையாள அட்டை புகைப்படம், கைரேகை, கருவிழி பதிவு எடுக்கப்பெறாத ஓய்வூதியதாரர்களுக்கு வருகிற 10.05.2016 மற்றும் 11.05.2016 வரையிலும் மாவட்ட கருவூலம், இராமநாதபுரம் மற்றும் சம்பந்தப்பட்ட சார்நிலைக் கருவூலங்களில் புகைப்படம் எடுக்கும் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது. எனவே ஓய்வூதியதாரர்கள் தங்களுடைய குடும்ப அட்டை நகலினை கருவூலங்களில் சமர்ப்பித்து இச்சிறப்பு முகாமை பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**